NEWBEC

NEW WAY OF BEING CHURCH | பொதுக்காலம் 32 ஆம் ஞாயிறு | 8 நவம்பர் 2026

ஒன்றித்தப் பயணம் மற்றும் இறைவாக்கு உரைக்கும் திருஅவையை நோக்கி ஒன்றித்து நடத்தல்

மறைத்தூதுரைக்கும் சீடத்துவத்திற்கான மக்கள்

மாதாந்திர நோக்கம்: சூழலியல் – பூமியின் அழுகை ஏழைகளின் அழுகை



நாம் ஆயத்தமாய் இருக்கிறோமா?

விழித்திருந்து ஆயத்தமாக ருக்குமாறு ன்று நமக்கு அறிவுறுத்தப்படுகிறது; ஏனெனில், மானிடமகன் வரும் நேரம் நமக்குத் தெரியாது.

மீட்பு என்பது நம் தனிப்பட்ட பொறுப்பாகும். மணமகன் வந்தபோது, போதுமான எண்ணெய் இல்லாத தோழியர் போதுமான அளவு எண்ணெய் வைத்திருந்தவர்களிடம் அதைப் பகிர்ந்து கொள்ளுமாறு கெஞ்சினார்கள். முன்மதியுடைய தோழியர் பகிர்ந்துகொள்ள விரும்பாததால் அவர்கள் சுயநலவாதிகளாகத் தெரிவதுதான் பெரும்பாலும் நம் கவனத்தை ஈர்க்கிறது. ஆனால், தாராள மனப்பான்மையின்றி இருப்பது சுயநலம் ஆகாது; ஏனெனில், அது நாம் அங்கீகரிக்க வேண்டிய ஒரு உண்மையைச் சுட்டிக்காட்டுகிறது. "ஆயத்தம்" என்ற விஷயத்தில், அதாவது அறநெறி சார்ந்த வாழ்வை வாழ்வதில், நமக்குப் பதிலாக வேறு யாரும் அந்த அறநெறியைக் கடைப்பிடிக்க முடியாது. வேறு வார்த்தைகளில் சொல்வதானால், அறிவிலிகளான தோழியர்களின் விஷயத்தில் விண்ணகம் கணக்குப்பாராமல் நடந்துகொண்டால் நன்றாக இருக்குமே என்று நாம் எவ்வளவுதான் விரும்பினாலும், உண்மை என்னவென்றால், புனிதப்படுத்தும் அருளைப் பகிர்ந்துகொள்ள முடியாது. **ஆண்டவர் இரக்கமுள்ளவர் என்பதால் எப்படியாவது நமக்காகக் கதவைத் திறப்பார் என்று நம்பி, ஆயத்தங்கள் முக்கியமல்ல என்பது போல நாம் வாழ்ந்தால், அது தவறு.** நமக்காகக் கதவைத் திறக்கவோ அல்லது கதவை அடைக்கவோ அவர் மறுபுறத்தில் காத்திருக்கவில்லை. மாறாக, நம்முடைய ஆயத்தமின்மையால் நாமே கதவை அடைத்துக்கொண்டிருக்கிறோம். எனவே, இங்கே நமக்குக் கிடைக்கும் காலம் முடிவில்லாதது அல்ல. அவர் வருவதற்காக நாம் நீண்ட காலமாகவோ அல்லது என்றென்றும் காத்திருப்பது போலத் தோன்றினாலும், அந்தக் காலம் வரையறுக்கப்பட்டதே. (7 நவம்பர் 2020 தேதியிட்ட ஒரு இயேசு சபை அருள்பணியாளரின் மறையுரையிலிருந்து எடுக்கப்பட்டது)

எதிர்காலத்தைப் பொறுத்தவரை நாம் கொண்டிருக்க வேண்டிய மனப்பான்மையின் மீது இப்புதுமைக்கதை கவனம் செலுத்துகிறது. நாம் நம்மை நாமே கேட்டுக்கொள்ள வேண்டிய கேள்வி இதுதான். இயேசுவை ஏற்றுக்கொள்ள நாம் தயாராக இருக்கிறோமா? அவரை எதிர்கொள்ள நாம் தயாராக இருக்கிறோமா?

இரத்தப் புற்று நோய் இருப்பது கண்டறியப்பட்டபோது ஒரு பெண் இக்கேள்வியை எதிர்கொள்ள நேர்ந்தது. மருத்துவரிடம் அவருடன் சென்றிருந்த அவரது இரட்டைச் சகோதரி, நோயின் தன்மையைக் கேட்டு உடைந்துபோனார். பின்னர் வீடு திரும்பும் வழியில், 'படைத்தவரைச் சந்திக்க' (இறப்பை எதிர்கொள்ள) அவர் தயாராக இருக்கிறாரா என்று அந்தச் சகோதரி கேட்டார். அதற்கு அவர், இயேசுவே தனது எதிர்காலத்தைத் தாங்கி வழிநடத்துகிறார் என்று நம்புவதாகவும், எது நடந்தாலும் அதுவே தனது விதி என்று நம்புவதாகவும் பதிலளித்தார். நமது வாழ்வின் நோக்கமும் பணியும் இன்னும் முழுமையடையவில்லை என்பதையே இக்கதை நமக்கு உணர்த்துகிறது.

பூமி நம் கவனத்தை ஈர்த்துக்கொண்டிருக்கும் வேளையில், நமது அன்றாட வாழ்க்கை முறையை நாம் எவ்வாறு அமைத்துக்கொள்ள வேண்டும்? பொருட்களைத் தூக்கி எறியும் மனப்பான்மையிலிருந்து மாறி, அவற்றைப் பாதுகாத்துப் பயன்படுத்தும் நிலைக்கு நமது அணுகுமுறையும் செயல்களும் மாறியுள்ளனவா?



இன்றைய இறைவார்த்தை:

சாலமோனின் ஞானம் 6: 12-16
திருப்பாடல் 63: 2-8
1 தெசலோனிக்கேயர் 4: 13-18 (அல்லது 4: 13-14)
மத்தேயு 25: 1-13



"நுகர்வு கலாச்சாரமும் 'பயன்படுத்திவிட்டுத் தூக்கி எறியும்' பழக்கமும், வளங்களை வீணாக்குவதற்கும் அளவுக்கு அதிகமாகப் பயன்படுத்துவதற்கும் நம்மைப் பழக்கிவிட்டன."

- திருத்தந்தை பிரான்சீஸ்

INTERNAL CIRCULATION ONLY
BUL 45/2026

வெளியீடு: மாமறைமாவட்ட மேய்ப்புப்பணி நிலையம் (API) | **Email:** api@archkl.org